# தூய லூர்து அன்னை ஆலயம்

50, ஓபியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg


| | |
|---|---|
| **பங்குத்தந்தை:** அருட்திரு மைக்கேல் சீத்தாராம் *frmichaelsitaram@gmail.com* | **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு பால் இயோ *fryeopaul@gmail.com* |
| **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு தே. நித்திய சகாயராஜ் *nithiya@catholic.org.sg* | **பங்கு அலுவலகம்:** *ololsec@gmail.com* *ololpastoral@gmail.com* |


| 21 ஜூலை 2019 | பொதுக்காலம் 16 ஆம் ஞாயிறு | மூன்றாம் ஆண்டு |
|---|---|---|



# உங்கள் சிந்தனைக்கு...

இயேசுவிற்கு பிரியமானவர்களே! பொதுக்காலம் 16ஆம் ஞாயிறுத் திருவழிபாட்டிற்கு வருகை தந்துள்ள உங்கள் அனைவருக்கும் இயேசுவின் இனிய நாமத்தில் நல்வாழ்த்துகள்! இன்றைய வழிப்பாட்டு வாசகங்கள் நமக்கு விருந்தோம்புதல் பற்றிக் கூறும் அதேவேளையில் நாம் முதலில் நிலைவாழ்வுக்குத் தேவையான நல்லதை நம்மில் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதையும் நமக்கு எடுத்துரைக்கின்றன.

முதல் வாசகத்தில் ஆபிரகாம் இறைத்தூதர்களுக்கு விருந்தோம்பல் செய்கின்றார். ஆனால் இரண்டாம் வாசகத்தில் திருஅவையினர் பட்டுக்கொண்டிருக்கும் துன்பம் கிறிஸ்துவில் அவர்கள் இணைந்திருப்பதற்கான அடையாளம் என்பதைச் சுட்டிக்காட்டும் தூய பவுல், துன்பத்தைப்போல மாட்சியும் பின்தொடரும் என வாக்குறுதியை தருகின்றார். இவ்வாறாக, கிறிஸ்துவின் விருந்தோம்பல் அவரின் தற்கையளிப்பிலும், அவர் தன் மக்களுக்குத் தரும் மாட்சிமையிலும் அடங்கியிருக்கிறது.

இன்றைய நற்செய்தி வாசகத்தில் பற்பலப் பணிகளில் மிகவும் பரபரப்பாக இருந்த மார்த்தா, ஆண்டவர் இயேசுவின் காலடியில் அமர்ந்து அவருடைய வார்த்தையைக் கேட்டுக்கொண்டிருந்த மரியா இவர்களைப் பற்றித் தியானிக்கின்றோம். இந்த இருவரில் நாம் யார்? என்று அறிந்து கொள்வது மிகவும் தேவையான ஒன்றாக இருக்கின்றது. பல நேரங்களில் நாம் மார்த்தாவைப் போன்று இவையெல்லாம் கிறிஸ்தவ - வாழ்க்கைக்குத் தேவை என்று நினைத்துக்கொண்டு கிறிஸ்துவை விட்டு எங்கோ சென்றுகொண்டிருக்கின்றோம். நமக்கு இருக்கின்ற வேலையில் இறைவனிடம் வேண்டுவதற்கு எங்கே நேரம் இருக்கின்றது? என்று குறைபட்டுக் கொள்கிறோம். இத்தகையோர் மரியாவைப் போன்று இயேசுவின் காலடியில் அமர்ந்து, அவருடைய வார்த்தையைக் கேட்டு, அதன்படி தங்களுடைய வாழ்க்கையை அமைத்துக்கொண்டு, அதன்மூலம் இயேசுவுக்கு உகந்தவர்களாக மாற இன்றைய திருப்பலியில் மன்றாடுவோம்.

# வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னை பெருவிழா 2019



ஆண்டுதோறும் நமது ஆலயத்தில் நடைபெறும் வேளாங்கண்ணி தூய ஆரோக்கிய அன்னையின் ஆண்டுப் பெருவிழா இவ்வருடமும், வருகின்ற வாரம் (28-07-2019) முதல் நவநாளுடன் ஆரம்பித்து சிறப்பாக நடைபெறவுள்ளது.

08-09-2018 **ஞாயிறு** மாலை 6:00 மணிக்குப் பெருவிழாத் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து அன்னையின் திருவுருவத் தேர்ப்பவனியும் நடைபெறும்.

**அனைவரும் வருக! வேளாங்கண்ணி அன்னையின் ஆசீர் பெறுக!!**

வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னையின் பெருவிழாவைச் சிறப்பாகக் கொண்டாட, தாராள உள்ளத்தோடு நன்கொடை கொடுத்து உதவும்படி உங்களை அன்புடன் வேண்டுகிறோம்.

## ஆலயப் புதுப்பிக்கும் பணிக்கான நிதி சேகரிப்பு



அன்பார்ந்தவர்களே! நமது தூய லூர்து அன்னை ஆலயப் புதுப்பிக்கும் பணிகள், வெகுவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்காக உங்கள் நன்கொடைகளை காசோலை மூலமாக “Church of Our Lady of Lourdes” என்ற பெயருக்கு வழங்கலாம். காசோலையின் பின்புறத்தில் “Building Fund” என்று குறிப்பிடவும். தாராள மனதுடன் உங்கள் நன்கொடைகளை அளிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

## தமிழ் மறைக்கல்வி வகுப்புக்கள்




ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக் கிழமை காலைத் தமிழ் திருப்பலி முடிந்ததும், நமது ஆலயத்தில் தமிழில் மறைக்கல்வி வகுப்புக்கள் நடைபெறுகின்றன. உங்கள் பிள்ளைகளும் ஞானத்தில் வளர அனுப்பி வையுங்கள்.

## GIFT திட்டத்திற்காக இரண்டாம் காணிக்கை

இவ்வாரயிறுதித் திருப்பலிகளில் எடுக்கப்படும் இரண்டாம் காணிக்கை, நமது உயர்மறைமாவட்டத்தின் GIFT (நம்பிக்கையுடனும் நன்றியுணர்வோடும் கொடுத்தல்) திட்டத்திற்காக வழங்கப்படும். இக்காணிக்கையானது, நம் உயர்மறைமாவட்டத்தில் செயற்படும் பல்வேறு அமைப்புக்களுக்காகவும், கட்டிடத் திட்டங்களுக்காகவும் பயன்படுத்தப்படும். தாராள மனதுடன் கொடுக்கும் உங்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள்.

## ஆலயத் துப்பரவு மற்றும் தூய்மைப் பணி




**இன்று மதியம் 2:30 மணி**

ஆலயத் துப்பரவு மற்றும் தூய்மைப் பணியை முன்னிட்டு, நமது ஆலயம் மதியம் 2:30 முதல் 4:00 மணிவரை மூடப்பட்டிருக்கும். வாருங்கள்! நமது ஆலயத்தை தூய்மைப்படுத்த தன்னார்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

## நற்கருணை ஆராதனை வழிபாடு

**04-08-2019 ஞாயிறு மாலை 5:00 மணி**



திவ்விய நற்கருணையில் வீற்றிருக்கும் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுடன் ஒரு மணி நேரம் செலவிட்டு அவருடைய ஆசீரைப் பெறவும், நம் குடும்பங்களை ஒப்புக் கொடுக்கவும், குருக்களுக்காகவும், தேவ அழைத்தலுக்காகவும் செபிக்கவும் உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

## ஞாயிறு வாசகங்கள்



| | |
|---|---|
| **முதல் வாசகம்:** | தொடக்கநூல் 18:1-10 |
| **பதிலுரைப்பாடல்:** | திருப்பாடல் 15: 2. 3-4. 5 |
| **பதிலுரை:** | ஆண்டவரே, உம் கூடாரத்தில் தங்கிடத் தகுதியுள்ளவர் யார்? |
| **இரண்டாம் வாசகம்:** | கொலோசையர் 1:24-28 |
| **வாழ்த்தொலி:** | அல்லேலூயா, அல்லேலூயா! சீரிய நல் உள்ளத்தோடு வார்த்தையைக் கேட்டு, அதைக் காத்து, மன உறுதியுடன் பலன் தருகிறவர்கள் பேறுபெற்றோர். அல்லேலூயா. |
| **நற்செய்தி வாசகம்:** | லூக்கா 10:38-42 |

## ஆலயத் திருப்பலி நேரங்கள்



| | |
|---|---|
| வார நாட்கள் (ஆங்கிலம்) : | மதியம் 12:30 & மாலை 6:30 மணி |
| சனி (ஆங்கிலம்) : | மாலை 6:00 & 7:30 மணி |
| ஞாயிறு (ஆங்கிலம்) : | காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| ஞாயிறு (தமிழ்) : | காலை 9:30 & மாலை 6:30 மணி |
| பொது விடுமுறை: | காலை 9:00 மணி (ஆ),10:00 மணி (த) |

## ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை : | மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை : | மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | வெள்ளி மாலை 7:00 மணி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை : | வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ் | செபமாலையும் விவிலியப் பகிர்வும் : | ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை : | ஞாயிறு மாலை 6:00 மணி |
| | தூய லூர்து அன்னை நவநாள் : | முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் : | முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் : | வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் : | சனி மாலை 8:30 மணி |
| | புனித பியோ செப வழிபாடு : | மாதத்தின் 23ம் தேதி இரவு 8:30 மணி |

**உங்கள் கவனத்திற்கு:** உயர்மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ, அல்லது உங்கள் இல்லத்திலோ, உங்களுக்காக செபிப்பதாகக் கூறிக் கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு. நன்றி.

